**WORLD SAIVA COUNCIL (AUSTRALIA) INC.**

**உலக சைவப் பேரவை (அவுஸ்திரேலியா)**

Postal Address: 6, Dudley Street, Auburn, NSW 2144

Tel: 0408 432 680 **email: sabanathank@gmail.com**

# தமிழ் யாப்புஇலக்கண வகுப்பு-39

## ஆசிரியர்: சைவப்புலவர் முரு.சேமகரன் (கவிஞர் கல்லோடைக் கரன்)

## 26-08-2026

தமிழ் யாப்பிலக்கண வகுப்பு -3; வகுப்பு:39; 26-08-2026

தொல்:பொரு: 8, செய்யுளியல்

செய்யுளின் உறுப்புகளில் அடுத்து 'சீர்' பற்றிப் பார்ப்போம்:

1 "ஈரசை கொண்டு மூவசை புணர்த்துஞ்
சீரியைந் திற்றது சீரெனப்படுமே" (324)

இ-ள்: இரண்டசையானும் மூன்றசையானும் ஒவ்வொரு சொற்கள் சீராக அமைந்து முடிவன 'சீர்' எனப்படும்.

கவனிக்க :-

ஓரசைச் சீர் வெண்பாவின் ஈற்றடியில் ஈற்றுச் சீராக வருவது என்றதாலும், நாலசை கொண்டமையும் சீர்கள் வருவன மிகக் குறைந்தளவே என்றதாலும் அவற்றை ஈண்டு தொல்காப்பியர் குறிக்காது விட்டார் எனக் கொள்க. பின்பு குறிப்பார்.

## 2

**எனவே,**

**நேர்நேர் நிரைநேர் நிரைநிரை நேர்நிரை**

**என்பன நான்கும் இயற்சீர்கள் ஆகும்.**

**நேர்புநேர்பு நிரைபுநேர்பு**

**நிரைபுநிரைபு நேர்புநிரைபு என்பன**

**நான்கும் ஆசிரியவுரிச் சீர்களாகும்.**

தமிழ் யாப்பிலக்கண வகுப்பு -3; வகுப்பு:39; 26-08-2026

தொல்:பொரு: 8, செய்யுளியல்

**இயற்சீர் அமைந்த சுவாமி மலைத் திருப்புகழ் :**

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய - குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய - மணவாளா
காது மொருவிழி காகமுற அருள்
மாய னரிதிரு -மருகோனே!

பா|தி மதி|நதி போ|து மணி|சடை
நேர்|நேர் நிரை|நிரை நேர்|நேர் நிரை|நிரை
நா|த ரரு|ளிய - கும|ரே|சா
நேர்|நேர் நிரை|நிரை நிரை|நேர்|நேர்
பா|கு கனி|மொழி மா|து குற|மகள்
நேர்|நேர் நிரை|நிரை நேர்|நேர் நிரை|நிரை
பா|தம் வரு|டிய – மண|வா|ளா
நேர்|நேர் நிரை|நிரை நிரை|நேர்|நேர்
கா|து மொரு| விழி கா|கமு|ற அருள்
நேர்|நேர் நிரை|நிரை நேர்|நிரை|நேர் நிரை
மா|ய னரி|திரு - மரு| கோ|னே!
நேர்|நேர் நிரை|நிரை நிரை|நேர்|நேர்

தமிழ் யாப்பிலக்கண வகுப்பு -3; வகுப்பு:39; 26-08-2026

தொல்:பொரு: 8, செய்யுளியல்

**3 எ-டு: (ஆசிரியவுரிச்சீர்)**

வீடுபேறு -- நேர்புநேர்பு

வரகுச்சோறு -- நிரைபுநேர்பு

தடவுமருது -- நிரைபுநிரைபு

பாடுகுருகு -- நேர்புநிரைபு

**திருமுருகாற்றுப்படையில் *நேர்பு அசை* எ-டு:**

1. வலன் *ஏர்பு* (வரி -1)
2. புலராச் சாந்தம் புலர்சந்து *பூண்டு* (வரி - 15)
3. நெடுவேள் மார்பின் ஆரம் *சூழ்ந்து* (வரி - 148)
4. அஞ்சுவரு மரபின் கட்கண் *நோக்கு* (வரி - 150)

*நிரைபு அசை* எ-டு:

1. பல்லா ஆன் நிரை *பரந்து* (வரி - 42)
2. வானதர் உருமின் முரசு *அதிர்ந்து* (வரி - 119)
3. துளங்கு இயல் மார்பின் நன்மலம் *அமர்ந்து* (வரி 151)
4. நறைக்காய் *இடையிடுபு* (வரி - 190)

தமிழ் யாப்பிலக்கண வகுப்பு -3; வகுப்பு:39; 26-08-2026

தொல்:பொரு: 8, செய்யுளியல்

**4 நிரையசைகள் மிகவதிகமாக வருமாறு சம்பந்தப் பெருமான் அருளிய திருநள்ளாற்றுத் திருப்பதிகம்:**

"தளிரிள வளரொளி தனதெழில் தருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை இணையவை குலவலின்
நளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தம் நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே"

"தளி|ரிள வள|ரொளி தன|தெழில் தரு|திகழ் மலை|மகள்
குளி|ரிள வள|ரொளி வன|முலை இணை|யவை குல|வலின்
நளி|ரிள வள|ரொளி மரு|வுநள் ளா|றர்|தம் நா|மமே
மிளி|ரிள வள|ரெரி யிடி|லிவை பழு|திலை மெய்ம்|மை|யே"

**- இவ் வகுப்பு நிறைவு --**